සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No DSD/HO/04/LH/06/NEMP - 2025 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No ........................................... | දිනය<br>திகதி<br>Date 2025.06.26 |

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம்** 2025/07

சகல மாவட்ட செயலாளர்கள்/மாவட்ட
சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்
சகல மாவட்ட சமுர்த்தி பிரதி/உதவிப் பணிப்பாளர்கள்,
சகல சமுர்த்தி தலைமைப்பீட, வங்கிச் சங்க,கருத்திட்ட ,சமுதாய அடிப்படைவங்கி முகாமையாளர்கள்,
சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

## சமூக வலுவூட்டல் தேசிய வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் 2025 அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுதல் - வாழ்வாதார அபிவிருத்தி

**அறிமுகம்** ;- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் செயல்பட்ட சமுர்த்தி நிவாரண உதவி வழங்கும் பொறுப்புக்கள் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் 2023.04.17 மற்றும் 2024.09.25ஆம் திகதியின் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அக்குடும்ப அலகுகளை முழுமையாக வலுவூட்டும் பொறுப்புக்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2025.02.11ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2025/01 என்ற இலக்கத்தினையுடைய சமுர்த்தி சுற்றறிக்கையின் இணைப்பு 1 இற்கமைய 4 தொகுதிகளின் கீழ் பிரிவொன்றில் இருந்து 50 குடும்ப அலகுகளை தெரிவு செய்வதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு ஏலவே நலன்புரி நன்மைகள் சபையில் இருந்து பெற்றுக்கொண்ட 25 பிரதேச செயலர் பிரிவுகளுக்கான அஸ்வெசும பயனாளிப் பெயர் பட்டியல் மாவட்டத்திற்கு ஒன்று என்ற வகையில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அப்பெயர்பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை வலுவூட்டுவதனை இலக்காக்கிக்கொண்டு இச்சுற்றறிக்கை ஆலோசனைகள் வெளியிடப்படுகின்றது. 2025 ஆம் ஆண்டில் திறைசேரி ஒதுக்கீடாக வரையறுக்கப்பட்ட அளவு தொகையே கிடைக்கப் பெற்றுள்ளதனால் அந்த நிதியத்தினை பயன்படுத்தி வறிய மற்றும் மிகவறிய ஆகிய இரு தொகுதிகளுக்கும் சொந்தமான குடும்ப அலகுகளில் வாழ்வாதார மேம்பாட்டினை இலக்காக்கிக்கொண்டு பொருத்தமான வாழ்வாதாரக் கருத்திட்டங்களை செயல்படுத்துவதற்குரிய ஆலோசனைகள் இதில் உள்ளடங்கியுள்ளது.

**பயனாளி குடும்பங்களை இனம் காணுதல்:-** ஏற்கனவே நலன்புரி நன்மைகள் சபையின் மூலம் பெற்றுக்கொண்டு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலகப் பிரிவின் கிராமப் பிரிவுகளில் அஸ்வெசும பயனாளிப் பெயர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/01, முதலாம் இணைப்பின் பிரகாரம் 01,02 மற்றும் 03 ஆகிய தொகுதிகளின் கீழ் 38 குடும்பங்களை தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதன்பின்னர் அக்குடும்பங்களின் அடிப்படைத் தகவல்களை இணைப்பு 01 இன் பிரகாரம் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இச் சுற்றறிக்கை மூலம் வெளிட்டப்படுவது அவ்வாறு இனம் கண்ட குடும்பங்களிலிருந்து வறிய மற்றும் மிகவறிய ஆகிய இரண்டு தொகுதிகளுக்குரிய குடும்பங்கள் மாத்திரமேயாகும். கருத்திட்டத்தின் பொருட்டு அக் குடும்பங்களை தெரிவு செய்யும்போதும் அஸ்வெசும பயனாளிக் குடும்பங்களை சமூக வலுவூட்டல் வேலைத் திட்டத்திற்கு இனங்காணும்போது வழங்கப்பட்டுள்ள எடுகோள்கள் அதே விதத்தில் செல்லுபடியாகும்.

1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step. 4 th floor, Sethsiripaya Battaramulla

| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

**குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் கருத்திட்டம் வாழ்வாதார கருத்திட்டங்களை இனங்காணுதல்** :- புதிய வலுவூட்டல் வேலை திட்டங்கள் முறைப்படியான திட்டங்களுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படுவதனால் வாழ்வாதார கருத்திட்டங்களை இனம் காண்பதும் முறைப்படி மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்த வேலை திட்டத்தின் கீழ் தனிமையான வாழ்வாதார கருத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாத்திரம் குடும்பங்களை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதுடன் குடும்ப அலகுகள் முகம் கொடுக்கின்ற சகல பொருளாதார, சமூக மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். அதற்கமைய 2025.05.22ஆம் திகதியிடப்பட்ட 2025/01ஆம் இலக்க சுற்றறிக்கையின் இரண்டாவது பிற் சேர்க்கையாக முன்வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் 01ஆவது இணைப்பின் பிரகாரம் குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனைகளின் பிரகாரம் குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்கும் போது அதன் முதலாவது இலக்காக குறிப்பிட்டு இருப்பது ஒவ்வொரு குடும்ப அலகிற்கும் மிகவும் பொருத்தமான வாழ்வாதார அல்லது தொழில் வாய்ப்பினை இனம் காண்பதாகும். இச் சுற்றறிக்கை மூலம் குடும்ப அலகுகளுக்கு பொருத்தமான வாழ்வாதார வழி ஒன்றினை இனம் காண்பதற்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்படுவதுடன் ஏதேனும் ஒரு குடும்ப அலகொண்டிற்கு தொழில் வாய்ப்பு ஒன்றில் ஈடுபடுவதற்கு எதிர்பார்ப்பதாயின் அதற்குரிய ஆலோசனைகள் ஏற்கனவே பணிப்பாளர் தலைமை அதிபதியின் 2025.06.04 ஆம் திகதியிடப்பட்ட சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/05 சந்தைப்படுத்தல் அபிவிருத்தி வேலைத் திட்டம் என்ற பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கும் போது பொருளாதார இலக்குகளின் கீழ் ஒன்றை விட கூடுதலான இலக்குகளை இனம் கண்டாலும் முன்னுரிமைக்கு அமைய சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக வலுவூட்டல் வேலை திட்டத்தின் கீழ் வசதிகள் வழங்கப்படுவது ஒரு சந்தர்ப்பத்திற்கு மாத்திரமே ஆகும்.

குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரிக்கும் போது ஏதேனும் குடும்ப அலகு ஒன்று ஏற்கனவே போதுமான அளவு வருமானத்தினை பெறுவதாயின் அக்குடும்ப அலகிற்கு வாழ்வாதார கருத்திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்துவதனை விட கூடிய கவனத்தினை செலுத்த வேண்டியது அக்குடும்ப அலகு முகம் கொடுத்துள்ள பிற சமூக மற்றும் உளவியல் ரீதியான சிக்கல்களை இனம் கண்டு கொண்டு அதற்கு தீர்வுகளை காணும் பொருட்டாகும்.

வாழ்வாதார கருத்திட்டங்களை இனங்காணும் போது ஏற்கனவே பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மேற்கொண்ட சந்தைப் பகுப்பாய்வு மற்றும் மாற்று வாழ்வாதார சந்தர்ப்பங்களை இனம் காண்பது தொடர்பில் மேற்கொண்ட வள வரைபடுத்தல் (Resource Mapping) நடவடிக்கைகளின் போது தங்களது மாவட்டத்திற்குரிய பயனுறுதி வாய்ந்த வாழ்வாதார கருத்திட்டம் தொடர்பில் முழுமையான விளக்கம் ஒன்றினை பெற்றிருப்பீர்கள் என நம்புகின்றேன். உரிய பட்டியல் இணைப்பு 01 இன் மூலம் தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அந்த பட்டியலுக்கு மேலதிகமாக தொடர்ச்சியாக வருமான இலக்குகளை உருவாக்கக்கூடிய மிகப் பொருத்தமான கருத்து திட்டங்கள் இருப்பின் இனம் காண்பதற்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

**ஒவ்வொரு குடும்ப அலகின் பொருட்டும்** பொருத்தமான வாழ்வாதார கருத்திட்டத்தினை இனம் கண்டதன் பின்னர் மேற்சொன்ன கருத்திட்டங்களுக்கு வணிக அபிவிருத்தி திட்டம் ஒன்றினை தயாரித்தல் வேண்டும். அங்கு குடும்ப அலகுகளுக்கு சொந்தமான மனித மற்றும் பௌதீக வளங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்துதல் வேண்டும். (வணிக அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதற்குரிய படிவம் இணைக்கப்பட்டுள்ளது) (இணைப்பு 02).

**இலக்குக் குழுவை இனம் காணுதல்** :- ஏற்கனவே தங்களது மாவட்டத்திற்கு வழங்கியுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபையிடமிருந்து பெற்றுக்கொண்ட பட்டியலில் வறிய மற்றும் மிகவறிய இரண்டு தொகுதிகளுக்குமுரிய குடும்பங்களில் இருந்து இலக்குக் குழுக்களை தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். ஒரு பிரிவிலிருந்து வறிய மற்றும் மிக வறிய ஆகிய இரு தொகுதிகளில் இருந்து 15 குடும்பங்களை தெரிவு செய்தாலும் மொத்த குடும்ப எண்ணிக்கைக்கு இந்த நிதி ஒதுக்கீட்டின் கீழ் வாழ்வாதார உதவிகளை வழங்கக்கூடிய வாய்ப்புகள் இல்லை. (இணைப்பு 3) அதன் பிரகாரம் தங்களது மாவட்டத்திற்கு நிதியொதுக்கீடுகளை வழங்கக்கூடிய கருத்திட்டங்கள் (3 ஆம் இலக்க இணைப்பு படிவத்திற்கு அமைய) குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வறிய மிக வறிய ஆகிய இரு தொகுதிகளில் இருந்தும் மிக பொருத்தமான குடும்ப எண்ணிக்கையை தயவுசெய்து தெரிவு செய்யவும்.

**நிதியத்தினை வழங்குதல்** :- இக் குடும்ப அலகுகளின் பொருட்டு இனங்காணப்படுகின்ற வாழ்வாதார கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு குடும்ப அலகிற்கு ரூபா 50,000.00 என்ற வரையறைக்குட்பட்டதாக நிதி மாணியம் ஒன்றினை வழங்குவதற்கு மேலுள்ள (இணைப்பு 4) கருத்திட்ட எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குடும்ப அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக இனம் காணப்படுகின்ற வாழ்வாதார கருத்திட்டங்களுக்கு மாத்திரமே அந் நிதி ஒதுக்கீட்டினை வழங்க முடியும். அந்த நிதியியல் ரீதியான உதவியினை வழங்குவதற்கு முன்னர் கருத்திட்டத்திற்குத் தேவையான அவரிடம் உள்ள பௌதீக மற்றும் மனித மூலதனம் தொடர்பில் கவனத்தினை செலுத்தி வணிகத் திட்டமிடலை தயாரித்தல் வேண்டும். அத்திட்டத்தில் தொழிற்படு மூலதனத் தேவையின் பொருட்டு மாத்திரம் இந்த நிதி ஒதுக்கீட்டினை செலவிட வேண்டும். மேலும் பயனாளி வாழ்வாதார மானியங்களை பயன்படுத்துவது கருத்திட்டத்தின் எந்த விடயத்திற்கு என்பதை கருத்திட்ட அறிக்கையில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

மேலும் இக்கருத்திட்டத்தினை செயல்படுத்தும் போது திணைக்கள பங்களிப்பிற்கு 2% நிர்வாக செலவினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த நிர்வாக செலவானது பிரதேச செயலகத்திற்கு 1%மும் மாவட்ட செயலகத்திற்கு 0.5%மும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவின் நிர்வாக செலவாக 0.5%மும் என்ற வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது.செலவிடுகின்ற தொகைக்கு ஏற்பவே நிர்வாக செலவினை பெற முடியும். நிர்வாக செலவை மேலதிகமாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.(தங்களது மாவட்டத்தின் பொருட்டு நிதியம் ஒதுக்கப்படுகின்ற விதம் இணைப்பு 04 இன் மூலம் காட்டப்பட்டுள்ளது)

**கருத்திட்டத்தினை அங்கீகரித்தல் மற்றும் பயனாளிக்கு நிதியத்தினை வழங்குதல்** :- பயனாளி அல்லது அவரது குடும்ப அங்கத்தவர் ஒருவரின் பொருட்டு இனங்காணப்படுகின்ற வாழ்வாதார கருத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு இணைக்கப்பட்டுள்ள வணிகத் திட்டமிடலை தயாரித்தல் வேண்டும். அந்த வணிகத் திட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளின் பொருட்டும் கையொப்பமிடப்பட்டதன் பின்னர் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் பின்னர் கருத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீட்டை வழங்குதல் வேண்டும். ஒரு பயனாளியின் பொருட்டு வழங்கக்கூடிய அரசாங்கத்தின் பங்களிப்பானது ரூபா 50,000.00 என குறிப்பிடப்பட்டிருந்தாலும் வழங்கக் கூடிய மொத்த கருத்திட்ட செலவில் இருந்து 50% மாத்திரமேயாகும். (உதாரணமாக ரூபா 50,000/= ஐ வழங்கக் கூடியதாக இருப்பது பயனாளிப்பங்களிப்பு 50,000.00 ரூபாவுடன் கருத்திட்டக் கிரயமானது ஒரு இலட்சம் ரூபா ஆகின்ற சந்தர்பத்தில் மட்டுமே ஆகும்) கருத்திட்டத்தினை அங்கீகரித்ததன் பின்னர் நிதியை வழங்குவதற்கு முன்னர் இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் பயனாளியுடன் கையொப்பமிடல் வேண்டும்.

**ஒப்பந்தம் செய்து கொள்ளல்**:- அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வழங்கப்படுகின்ற உள்ளீடுகளை தனது வணிகத்தின் பணிகளுக்கென்று மாத்திரம் பயன்படுத்திக் கொள்வதாக குறித்த பயனாளி தனது பிரதேசத்தின் பிரதேச செயலாளரோடு இணைப்பு 06இன் பிரகாரம் ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

**முன்னேற்றத்தினை அறிக்கையிடுதல்** :- இக்கருத்திட்டத்தின் முன்னேற்றத்தினை மாதாந்தம் பெற்றுக்கொள்ள உத்தேசிக்கப்படுவதுடன் அதன் பொருட்டு பொருத்தமான முறை ஒன்றினை மிக விரைவாக தங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதுவரையில் ஒவ்வொரு பயனாளிக்குரிய வணிகத் திட்டமிடலை தயாரித்ததன் பின்னர் பிரிவு மட்டத்தில் அதன் பொழிப்பினை தயாரித்து இணைப்பு 05இன் பிரகாரம் jeevonopaya@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு வழங்குவதற்கு தங்களது தலைமைப் பீட முகாமையாளர்களுக்கு தயவுடன் ஆலோசனைகளை வழங்கவும்.

**பொதுவான ஆலோசனைகள்.**

01. இந்த வேலைத் திட்டத்தின் பொருட்டு பயனாளிகளை தெரிவு செய்து கொள்வதற்கு வாய்ப்பு இருப்பது தற்போது தங்களது மாவட்டத்தில் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபையில் இருந்து தரவுகளை பெற்றுக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவின் வறிய மற்றும் மிகவறிய குடும்ப அலகுகளின் அங்கத்தவர்களிலிருந்தாகும்.

02. தெரிவு செய்யப்படும் கருத்திட்ட பயனாளிகள் அனைவரும் சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்துவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

03. இந்த வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது பிரதேச செயலகங்களிலும் மாவட்ட அலுவலகங்களிலும் உதவிச் சேவைகள் தொகுதிக்கு சொந்தமான ஏனைய உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வது கட்டாயமானதாகும்.

04. கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது அரசாங்கத்தின் அங்கீகரித்த பெறுகைச் செயற்பாடுகள், நிதிப் பிரமாணம் மற்றும் இச் சுற்றறிக்கை ஆலோசனைகளை பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

05. வழங்கப்படுகின்ற திறைசேரி நிதி ஒதுக்கீடுகள் மற்றும் கட்டு நிதி என்பன 2025.11.30ஆம் திகதிக்கு முன்னர் கருத்திட்டம் மற்றும் வேலை திட்டங்களுக்கு செலவிட்டு முடிக்கப்படல் வேண்டும்.

06. பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் (Development Officer), கருத்திட்ட முகாமையாளர், சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் சமுதாய அடிப்படை வங்கிச் சங்க முகாமையாளர்கள் ஒன்றிணைந்து பிரிவில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்துள்ளமை தொடர்பில் கலந்துரையாடுதல், பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் பின் பணி ஆய்வுகள் மற்றும் முன்னேற்றத்தினை அறிக்கையிடல் வேண்டும்.

07. இங்கு சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு உத்தியோகத்தர்களையும் கருத்திட்டக் கண்காணிப்பின் பொருட்டு செயற்பாடு உள்ள விதத்தில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டியதுடன் வெளிப்பாட்டுத்தன்மை மற்றும் சமூக ரீதியான கணக்காய்வு ஒன்றின் பொருட்டு தேவையான சூழலினை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

08. முன்னேற்றத்தினை தேவையான எந்த சந்தர்ப்பத்திலும் தலைமைக் காரியாலயத்திற்கு வழங்கக்கூடிய பிரகாரம் தயாரிப்பதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு மாதத்திற்கும் இறுதி நாளில் தயாரிக்கப்பட்ட மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை அடுத்து வரும் மாதத்தின் 10ம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அந்த முன்னேற்றத்தினை jeevonopaya@gmail.com ஊடாக மாத்திரம் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவுக்கு வழங்க ஆவண செய்தல் வேண்டும்.

09. சகல வேலைத் திட்டங்களையும் வெற்றி கரமாக்கிக் கொள்ளும் பொருட்டு மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், மாவட்ட சமுர்த்தி பிரதி/ உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் சகல விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான கவனம் மற்றும் பின் பணி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது அத்தியாவசியமானதாகும்.

10. மேற்படி சகல வேலை திட்டங்களையும் வெற்றிகரமாக்கி கொள்வதற்கு தாங்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களினதும் அர்ப்பணிப்பினை போற்றி மதிப்பதுடன் இது தொடர்பில் மேலதிக விபரங்களை 0112873801 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அல்லது வாழ்வாதாரப் பிரிவின் உத்தியோகத்தர்களின் பிரத்தியேக தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதனாலோ விளக்கப்படுத்திக் கொள்ள முடியும் என்பதனை வினையமுடன் அறிய தருகின்றேன்.

……………………….
பீ.கே.எஸ்.சுபோதினி
பதில் பணிப்பாளர் தலைமை அதிபதி
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

பிரதிகள்:-

1. செயலாளர் கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க.பொருட்டு
2. மேலதிக செயலாளர்(சமூக வலுவூட்டல்) கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க.பொருட்டு
3. தலைவர் சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புச் சபை - உ.ந. பொருட்டு
4. பணிப்பாளர், சமூக பாதுகாப்பு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
5. பணிப்பாளர் நாயகம் தேசிய திட்டமிடல் திணைக்களம் - உ.ந. பொருட்டு
6. கணக்காய்வுத் தலைமைஅதிபதி தேசிய கணக்காய்வு அலுவலகம் - த.அ. பொருட்டு
7. மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
8. பிரதம கணக்காளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க.பொருட்டும் உ.ந. பொருட்டும்
9. பிரதான உள்ளக கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.க.பொருட்டு
10. சகல பிரிவுத் தலைவர்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம். - த.க. பொருட்டு
11. தலைமை பீட/சமுதாய அடிப்படை வங்கிச் சங்க/வங்கி முகாமையாளர்கள்/கருத்திட்ட முகாமையாளர்கள்

| Microenterprise Livelihood Options | Minimum Requirements | ව්‍යාපාර මාර්ගය | අවම අවශ්‍යතා | நுண் நிறுவனம் | குறைந்தபட்ச தேவைகள் |
|---|---|---|---|---|---|
| Bakery Products | Reliable supply of electricity, Safe place for equipment, Clean kitchen area (Tile top benches) to produce bakery products hygienically; | බේකරි නිෂ්පාදන | විශ්වාසදායක අඛණ්ඩ විදුලි සැපයුමක්, උපකරණ සඳහා ආරක්ෂිත ස්ථානයක්, බේකරි නිෂ්පාදන සනීපාරක්ෂක ලෙස නිෂ්පාදනය කිරීම සඳහා පිරිසිදු මුළුතැන්ගෙයි ප්‍රදේශය, ටයිල් සවි කළ මේසය (Tile Top benches); | பேக்கரி பொருட்கள் | நம்பகமான மின்சாரம் வழங்கல், உபகரணங்களுக்கு பாதுகாப்பான இடம், பேக்கரி பொருட்களை சுகாதாரமாக உற்பத்தி செய்ய சுத்தமான சமையலறை பகுதி (டைல் டாப் பெஞ்சுகள்); |
| Banana Cultivation | At least 1/2 acre, Reliable supply of water, Fencing in the land or can be fenced | කෙසෙල් වගාව | අවම වශයෙන් අක්කර 1/2 ක්, විශ්වාසදායක අඛණ්ඩ ජල සැපයුමක්, ඉඩම තුළ වැට බැඳ හෝ වැට බැඳිය හැකිය. | வாழை பயிர்ச் செய்கை | குறைந்தபட்சம் 1/2 ஏக்கர் வேலியுடன் கூடிய காணி அல்லது வேலி அமைக்கப்படலாம், நம்பகமான நீர் வழங்கல், |
| Bee-honey Production | Vegetation and flowers in the surrounding, Reliable supply of water | මී පැණි නිෂ්පාදනය | අවට වෘක්ෂලතා සහ මල්, විශ්වාසදායක අඛණ්ඩ ජල සැපයුමක් | தேனீ /தேன் உற்பத்தி | சுற்றியுள்ள தாவரங்கள் மற்றும் பூக்கள், நம்பகமான நீர் வழங்கல். |
| Betel Production | At least ½ acre land, Reliable supply of water | බුලත් නිෂ්පාදනය | අවම වශයෙන් අක්කර ½ ක ඉඩමක්, අඛණ්ඩ ජල සැපයුමක් | வெற்றிலை பயிர்ச் செய்கை | குறைந்தது ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல். |
| Bite Production | Reliable supply of electricity, Safe place for equipment, Clean kitchen area (Tile top benches) to produce bite products hygienically, safe area for releasing used oil to the environment; | Bites නිෂ්පාදනය | විශ්වාසදායක අඛණ්ඩ විදුලි සැපයුමක්, උපකරණ සඳහා ආරක්ෂිත ස්ථානයක්, සනීපාරක්ෂාව සඳහා බයිට් නිෂ්පාදන නිෂ්පාදනය කිරීම සඳහා පිරිසිදු මුළුතැන්ගෙයි ප්‍රදේශය (ටයිල් සවි කළ මේසය), භාවිතා කළ තෙල් පරිසරයට මුදා හැරීම සඳහා ආරක්ෂිත ප්‍රදේශයක්; | தின்பண்ட உற்பத்தி | உபகரணங்களுக்கு பாதுகாப்பான இடம், உணவுப் பொருட்களை சுகாதாரமாக உற்பத்தி செய்ய சுத்தமான சமையலறை பகுதி (டைல் டாப் பெஞ்சுகள்), பயன்படுத்தப்பட்ட எண்ணெயை சுற்றுச்சூழலுக்கு |
| Brick Production | ½ acre land area to get soil / Access to get soil, Reliable supply of water, Access to firewood | ගඩොල් නිෂ්පාදනය | පස ලබා ගැනීමට අක්කර භාගයක භූමි ප්‍රමාණයක් / පස ලබා ගැනීමට ප්‍රවේශය, විශ්වාසදායක ජල සැපයුමක්, දර සඳහා ප්‍රවේශය. | செங்கல் உற்பத்தி | மண் பெற ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல், விறகு கிடைப்பது. மூலப் பொருளான மண்ணைப் பெறக்கூடியதாக இருத்தல் |
| Cassava cultivation | ½ acre land, Reliable supply of water for irrigation | මඤ්ඤොක්කා වගාව | අක්කර ½ ක ඉඩමක්, වාරිමාර්ග සඳහා විශ්වාසදායක ජල සැපයුමක් | மரவள்ளிக்கிழங்கு பயிர்ச் செய்கை | ½ ஏக்கர் நிலம், பாசனத்திற்கு நம்பகமான நீர் வழங்கல். |
| Dairy Farming | ¼ to ½ acres per farmer for growing CO3 grass per cow, Availability of veterinary service or vet surgeon's office should be nearby | කිරි නිෂ්පාදනය | එළදෙනෙකුට CO3 තණකොළ වගා කිරීම සඳහා ගොවියෙකුට අක්කර ¼ සිට ½ දක්වා, පශු වෛද්‍ය සේවාවක් හෝ පශු වෛද්‍ය කාර්යාලයක් ළඟම තිබිය යුතුය. | பால் பண்ணை | ஒரு விவசாயிக்கு ¼ முதல் ½ ஏக்கர் வரை CO3 புல்லை பசுவிற்கு வளர்ப்பதற்கு, கால்நடை சேவை அல்லது கால்நடை அறுவை சிகிச்சை நிபுணர் அலுவலகம் அருகிலேயே இருக்க வேண்டும். |
| Dairy Products (Curd, Yoghurt, Ghee, Cheese) | Reliable supply of electricity, Safe place for equipment, Clean kitchen area (Tile top benches) to produce dairy products hygienically, Reliable way to obtain 25-35 litres of fresh milk per day | කිරි නිෂ්පාදන (කිරි, යෝගට්, ගිතෙල්, චීස්) | විශ්වාසදායක අඛණ්ඩ විදුලි සැපයුමක්, උපකරණ සඳහා ආරක්ෂිත ස්ථානයක්, සනීපාරක්ෂාව සඳහා කිරි ආශ්‍රිත නිෂ්පාදන නිෂ්පාදනය කිරීම සඳහා පිරිසිදු මුළුතැන්ගෙයි ප්‍රදේශය (ටයිල් සවි කළ මේසය) දිනකට නැවුම් කිරි ලීටර් 25-35ක් ලබා ගැනීමට විශ්වාසදායක ක්‍රමයක් | பால் பொருட்கள் (தயிர், தயிர், நெய், சீஸ்) | ஒரு நாளைக்கு 25-35 லிட்டர் புதிய பால் பெற நம்பகமான வழி. நம்பகமான மின்சாரம் வழங்கல், உபகரணங்களுக்கு பாதுகாப்பான இடம், உணவுப் பொருட்களை சுகாதாரமாக உற்பத்தி செய்ய சுத்தமான சமையலறை பகுதி (டைல் டாப் பெஞ்சுகள்), பயன்படுத்தப்பட்ட எண்ணெயை சுற்றுச்சூழலுக்கு வெளியிடுவதற்கான பாதுகாப்பான பகுதி; |
| Dried Fish production | Availability of fish nearby (e.g. local market), clean area for processing | කරවල නිෂ්පාදනය | අසල මාළු ලබා ගැනීමේ හැකියාව (උදා: දේශීය වෙළඳපොළ), සැකසීම සඳහා පිරිසිදු ප්‍රදේශයක් | கருவாடு உற்பத்தி | அருகில் மீன்கள் கிடைப்பது (எ.கா. உள்ளூர் சந்தை), பதப்படுத்துவதற்கு சுத்தமான பகுதி. |
| Ekle broom and Coir Broom Production | Ability to purchase ekle and coir locally, Easy and reliable way to obtain poles for the broom, Reliable supply of electricity at the production site | කොසු සහ කොහු කොසු නිෂ්පාදනය | දේශීයව එක්ලේ සහ කොහු මිලදී ගැනීමේ හැකියාව, කොස්ස සඳහා කණු ලබා ගැනීමට පහසු සහ විශ්වාසදායක ක්‍රමයක්, නිෂ්පාදන ස්ථානයේ විශ්වාසදායක විදුලි සැපයුමක්. | ஈர்க்கு விளக்குமாறு மற்றும் தென்னை நார் விளக்குமாறு உற்பத்தி | உள்ளூரில் எக்லே மற்றும் தென்னை நார் வாங்கும் திறன், துடைப்பத்திற்கு கம்பங்களைப் பெறுவதற்கான எளிதான மற்றும் நம்பகமான வழி, உற்பத்தி தளத்தில் நம்பகமான மின்சாரம் வழங்கல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Floor Mats and Mousquito Nets production | Availability of cotton waste materials nearby for making floor mats (for recycling); Reliable supply of electricity; Availability of materials for mosquito nets locally; Skills for producing floor mats and mosquito nets; | බිම් පැදුරු සහ මදුරු දැල් නිෂ්පාදනය | බිම් පැදුරු සැදීම සඳහා කපු අපද්‍රව්‍ය ළඟම තිබීම (ප්‍රතිචක්‍රීකරණය සඳහා); විශ්වාසදායක විදුලි සැපයුමක්; දේශීයව මදුරු දැල් සඳහා ද්‍රව්‍ය ලබා ගත හැකි වීම; බිම් පැදුරු සහ මදුරු දැල් නිෂ්පාදනය කිරීමේ කුසලතා; | தரை விரிப்புகள் மற்றும் கொசு வலைகள் உற்பத்தி | தரை விரிப்புகள் தயாரிப்பதற்கு (மறுசுழற்சி செய்வதற்கு) அருகிலுள்ள பருத்தி கழிவுப் பொருட்களின் கிடைக்கும் தன்மை; நம்பகமான மின்சாரம்; உள்ளூரில் கொசு வலைகளுக்கான பொருட்கள் கிடைக்கும் தன்மை; தரை விரிப்புகள் மற்றும் கொசு வலைகளை உற்பத்தி செய்வதற்கான திறன்கள்; |
| Goat Farming | ¼ to ½ acre land, Access to veterinery services nearby; Reliable supply of water (either a well or a stream), Ability to collect good fodder; | එළු පාලනය | අක්කර ¼ සිට ½ දක්වා ඉඩමක්, අසල පශු වෛද්‍ය සේවා සඳහා ප්‍රවේශය; විශ්වාසදායක ජල සැපයුමක් (ළිඳක් හෝ ඇළක්), හොඳ ආහාර එකතු කිරීමේ හැකියාව; | ஆடு வளர்ப்பு \| | ¼ முதல் ½ ஏக்கர் நிலம், அருகிலுள்ள கால்நடை சேவைகளுக்கான அணுகல்; நம்பகமான நீர் வழங்கல் (கிணறு அல்லது ஓடை), நல்ல தீவனங்களை சேகரிக்கும் திறன்; |
| Groundnut Production | ½ acre land; Reliable supply of water, availability of quality seed; | රටකජු නිෂ්පාදනය | අක්කර භාගයක ඉඩමක්; විශ්වාසදායක ජල සැපයුමක්, ගුණාත්මක බීජ ලබා ගැනීමේ හැකියාව; | நிலக்கடலை உற்பத்தி | ½ ஏக்கர் நிலம்; நம்பகமான நீர் விநியோகம், தரமான விதை கிடைப்பது; |
| Guava Production (Kilo Guvava) | ½ acre land, Reliable supply of water | පේර නිෂ්පාදනය (කිලෝ පේර) | අක්කර ½ ක ඉඩමක්, විශ්වාසදායක ජල සැපයුමක් | கொய்யா உற்பத்தி (கிலோ கொய்யா) | ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல் |
| Inland Fisheries | Availability of tanks or water bodies nearby, which are stocked with fingerlings regularly; Access to boats, fishing gear and nets | මිරිදිය ධීවර කර්මාන්තය | අසල වැංකි හෝ ජල සම්පත් තිබේ. ප්‍රදේශයේ ඇඟිලි පැටවුන් මිලදී ගත හැකිය. බෝට්ටු, ධීවර ආම්පන්න සහ දැල් සඳහා ප්‍රවේශය. | நன்னீர் மீன்வளம் | அருகிலுள்ள தொட்டிகள் அல்லது நீர்நிலைகள் கிடைப்பது, அவை தொடர்ந்து மீன் குஞ்சுகளுடன் சேமித்து வைக்கப்படுகின்றன; படகுகள், மீன்பிடி உபகரணங்கள் மற்றும் வலைகளை அணுகுதல். |
| Mechanized carpentry | Previous knowledge of carpentry work, interest in mechanized carpentery; Access to reliable electricity supply; ¼ acres of land for establishing the workshop; | යාන්ත්‍රික වඩු වැඩ | වඩු වැඩ පිළිබඳ පෙර දැනුම, යාන්ත්‍රික වඩු වැඩ පිළිබඳ උනන්දුව; විශ්වාසදායක විදුලි සැපයුමක් සඳහා ප්‍රවේශය; වැඩමුළුව ස්ථාපිත කිරීම සඳහා අක්කර ¼ ක ඉඩමක්; | இயந்திரமயமாக்கப்பட்ட தச்சு வேலை | தச்சு வேலை பற்றிய முந்தைய அறிவு, இயந்திரமயமாக்கப்பட்ட தச்சு வேலையில் ஆர்வம்; நம்பகமான மின்சார விநியோகத்திற்கான அணுகல்; பட்டறை நிறுவுவதற்கு ¼ ஏக்கர் நிலம்; |
| Moringa Production | ½ acre land, Reliable supply of water | මුරුංගා නිෂ්පාදනය | අක්කර ½ ක ඉඩමක්, විශ්වාසදායක ජල සැපයුමක් | முருங்கை உற்பத்தி | ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல் |
| Mushroom Cultivation | Vacant area inside the house or shed to do mushroom cultivation, Reliable supply of water | බිම්මල් වගාව | හතු වගාව සඳහා නිවස තුළ හිස් ප්‍රදේශයක් හෝ මඩුවක්, විශ්වාසදායක ජල සැපයුමක්. | காளான் பயிர்ச் செய்கை | காளான் செய்கை மேற்கொள்ளக்கூடிய உள்ளக இட வசதி வீட்டின் ஒரு பகுதி அல்லது ஒரு கொட்டகை, நம்பகமான நீர் வழங்கல் |
| Papaw Production | ½ acre land, Reliable supply of water | පැපොල් නිෂ්පාදනය | අක්කර ½ ක ඉඩමක්, විශ්වාසදායක ජල සැපයුමක් | பப்பாசி உற்பத்தி | ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல் |
| Passion fruit Cultivation | ½ acre land, Reliable supply of water | පැෂන් ෆෲට් වගාව | අක්කර ½ ක ඉඩමක්, විශ්වාසදායක ජල සැපයුමක් | பேஷன் பழ பயிர்ச் செய்கை | ½ ஏக்கர் நிலம், நம்பகமான நீர் வழங்கல் |
| Piggery production (to sell meat and piglets) | ¼ to ½ acre land, Access to veterinery services nearby; Reliable supply of water (either a well or a stream), facility to collect good feed or waste feed in the village areas. | ඌරු මස් නිෂ්පාදනය | අක්කර ¼ සිට ½ දක්වා ඉඩමක්, අසල පශු වෛද්‍ය සේවා සඳහා ප්‍රවේශය; විශ්වාසදායක ජල සැපයුමක් (ළිඳක් හෝ ඇළක්), ගමේ ප්‍රදේශවල හොඳ ආහාර හෝ අපද්‍රව්‍ය එකතු කිරීමේ පහසුකම. | பன்றி வளர்ப்பு | ¼ முதல் ½ ஏக்கர் நிலம், அருகிலுள்ள கால்நடை சேவைகளுக்கான அணுகல்; நம்பகமான நீர் வழங்கல் (கிணறு அல்லது ஓடை), கிராமப் பகுதிகளில் நல்ல தீவனம் அல்லது கழிவு தீவனத்தை சேகரிக்கும் வசதி. |
| Pineapple Production | ½ acre land, Reliable supply of water | අන්නාසි නිෂ්පාදනය | අක්කර ½ ක ඉඩමක්, විශ්වාසදායක ජල සැපයුමක් | அன்னாசி உற்பத்தி | ½ ஏக்கர் நிலம், நீர் |
| Poultry Farming (eggs) | ½ acre land; Access to supply of chicks, feed, vitamins, etc locally, Reliable supply of water and poultry farm buildings; Reliable way to dispose waste | කුකුළු ගොවිතැන (ස්ථර) | අක්කර ½ ක ඉඩමක්; දේශීයව කුකුළු පැටවුන්, ආහාර, විටමින් ආදිය සැපයීමට ප්‍රවේශය, ජලය සහ කුකුළු ගොවිපල ගොඩනැගිලිවල විශ්වාසදායක සැපයුම; | கோழி வளர்ப்பு (அடுக்குகள்) | ½ ஏக்கர் நிலம்; கோழிக்குஞ்சுகள், தீவனம், வைட்டமின்கள் போன்றவற்றை உள்ளூரில் வழங்குவதற்கான அணுகல், நம்பகமான நீர் மற்றும் கோழி பண்ணை கட்டிடங்களை வழங்குதல்; |

இணைப்பு 3

**சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் - 2025 திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் பிரகாரம் வாழ்வாதார கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**

| தொ.இ | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | பி.செ.பி எண்ணிக்கை | கி.சே.பி.எண்ணிக்கை | தொகுதி | | மொத்தம் | பிரிவொன்றுக்கு 15 வீதம் கருத்திட்டம் | கருத்திட்டம்வழங்கப்படவுள்ள |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | வறிய | மிகவறிய | | | |
| 1 | கொழும்பு | கொலன்னாவை | 1 | 46 | 727 | 200 | 927 | 690 | 399 |
| 2 | | கொழும்பு | 1 | 35 | 2485 | 524 | 3,009 | 525 | 304 |
| 3 | கம்பஹா | கொழும்பு | 1 | 39 | 1383 | 325 | 1,708 | 585 | 338 |
| 4 | களுத்தறை | பாணந்துறை | 1 | 72 | 2339 | 700 | 3,039 | 1,080 | 623 |
| 5 | காலி | பென் | 1 | 51 | 1380 | 400 | 1,780 | 765 | 443 |
| 6 | மாத்தறை | பெந்தோட்டை | 1 | 40 | 1124 | 637 | 1,761 | 600 | 347 |
| 7 | அம்பாந்தோட்டை | சூரியவெவ | 1 | 21 | 1233 | 179 | 1,412 | 315 | 183 |
| 8 | இரத்தினபுரி | எஹலியகொட | 1 | 44 | 2692 | 955 | 3,647 | 660 | 382 |
| 9 | கேகாலை | ரபுக்கனை | 1 | 89 | 4003 | 1,247 | 5,250 | 1,335 | 770 |
| 10 | குருணாகலை | கிரிபாவ | 1 | 35 | 946 | 198 | 1,144 | 525 | 303 |
| 11 | புத்தளம் | கட்பிட்டி | 1 | 31 | 2264 | 492 | 2,756 | 465 | 269 |
| 12 | கண்டி | துன்பனே | 1 | 67 | 628 | 194 | 822 | 1,005 | 581 |
| 13 | மாத்தளை | கலேவெல | 1 | 59 | 2483 | 730 | 3,213 | 885 | 511 |
| 14 | நுவரெலியா | கொத்மலை | 1 | 96 | 5172 | 2,689 | 7,861 | 1,440 | 830 |
| 15 | பதுளை | மகியங்களை | 1 | 35 | 5320 | 1,502 | 6,822 | 525 | 304 |
| 16 | மொணராகலை | பிபில | 1 | 40 | 1459 | 636 | 2,095 | 600 | 347 |
| 17 | அம்பாறை | தெஹி அத்தகண்டிய | 1 | 13 | 1646 | 399 | 2,045 | 195 | 113 |
| 18 | அநுராதபுரம் | பதவிய | 1 | 15 | 432 | 99 | 531 | 225 | 131 |
| 19 | பொலன்னறுவை | ஹிகுராங்கொடை | 1 | 53 | 3507 | 994 | 4,501 | 795 | 458 |
| 20 | யாழ்ப்பாணம் | வல்வெட்டித்துறை | 1 | 15 | 493 | 245 | 738 | 225 | 130 |
| 21 | வவுனியா | வவுனியா வடக்கு | 1 | 20 | 421 | 189 | 610 | 300 | 174 |
| 22 | மன்னார் | மன்னார் நகரம் | 1 | 49 | 1353 | 126 | 1,479 | 735 | 423 |
| 23 | கிளிநொச்சி | பச்சிளைய்பள்ளி | 1 | 18 | 925 | 303 | 1,228 | 270 | 157 |
| 24 | மட்டக்களப்பு | வவுனியா வடக்கு | 1 | 16 | 2316 | 791 | 3,107 | 240 | 139 |
| 25 | திருகோணமலை | பதவி ஸ்ரீபுர | 1 | 10 | 119 | 21 | 140 | 150 | 87 |
| 26 | முல்லைத்தீவு | துணுக்காய் | 1 | 20 | 441 | 306 | 747 | 300 | 174 |
| | | | | **1,029** | **47,291** | **15,081** | **62,372** | 15,435 | 8,920 |

இணைப்பு 4

# சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் - 2025

## மாவட்ட மட்டத்தில் நிதி ஒதுக்கீட்டினை ஒதுக்கதல் (திறைசேரி ஒதுக்கீடு )

| இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகின்றக ருத்திட்டங்களின் எண்ணிக்கை | ஒதுக்கப்படுகின்ற மொத்த ஒதுக்கீட்டினளவு | மாவட்ட நிர்வாகப் பிரிவு 0.5% | பி.சே நிர்வாகச் செலவு 1% | மாவட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்படும் செலவு ரூ:- |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | கொலன்னாவை | 399 | 19,950,000.00 | 99,750.00 | 199,500.00 | 20,249,250.00 |
| 2 | | கொழும்பு | 304 | 15,200,000.00 | 76,000.00 | 152,000.00 | 15,428,000.00 |
| 3 | கம்பஹா | கொழும்பு | 338 | 16,900,000.00 | 84,500.00 | 169,000.00 | 17,153,500.00 |
| 4 | களுத்தறை | பாணந்துறை | 623 | 31,150,000.00 | 155,750.00 | 311,500.00 | 31,617,250.00 |
| 5 | காலி | பென் | 443 | 22,150,000.00 | 110,750.00 | 221,500.00 | 22,482,250.00 |
| 6 | மாத்தறை | பெந்தோட்டை | 347 | 17,350,000.00 | 86,750.00 | 173,500.00 | 17,610,250.00 |
| 7 | அம்பாந்தோட்டை | சூரியவெவ | 183 | 9,150,000.00 | 45,750.00 | 91,500.00 | 9,287,250.00 |
| 8 | இரத்தினபுரி | எஹலியகொட | 382 | 19,100,000.00 | 95,500.00 | 191,000.00 | 19,386,500.00 |
| 9 | கேகாலை | ரபுக்கனை | 770 | 38,500,000.00 | 192,500.00 | 385,000.00 | 39,077,500.00 |
| 10 | குருணாகலை | கிரிபாவ | 303 | 15,150,000.00 | 75,750.00 | 151,500.00 | 15,377,250.00 |
| 11 | புத்தளம் | கட்பிட்டி | 269 | 13,450,000.00 | 67,250.00 | 134,500.00 | 13,651,750.00 |
| 12 | கண்டி | துன்பனே | 581 | 29,050,000.00 | 145,250.00 | 290,500.00 | 29,485,750.00 |
| 13 | மாத்தளை | கலேவெல | 511 | 25,550,000.00 | 127,750.00 | 255,500.00 | 25,933,250.00 |
| 14 | நுவரெலியா | கொத்மலை | 830 | 41,500,000.00 | 207,500.00 | 415,000.00 | 42,122,500.00 |
| 15 | பதுளை | மகியங்களை | 304 | 15,200,000.00 | 76,000.00 | 152,000.00 | 15,428,000.00 |
| 16 | மொணராகலை | பிபில | 347 | 17,350,000.00 | 86,750.00 | 173,500.00 | 17,610,250.00 |
| 17 | அம்பாறை | தெஹி அத்தகண்டிய | 113 | 5,650,000.00 | 28,250.00 | 56,500.00 | 5,734,750.00 |
| 18 | அநுராதபுரம் | பதவிய | 131 | 6,550,000.00 | 32,750.00 | 65,500.00 | 6,648,250.00 |
| 19 | பொலன்னறுவை | ஹிகுராங்கொடை | 458 | 22,900,000.00 | 114,500.00 | 229,000.00 | 23,243,500.00 |
| 20 | யாழ்ப்பாணம் | வல்வெட்டித்துறை | 130 | 6,500,000.00 | 32,500.00 | 65,000.00 | 6,597,500.00 |
| 21 | வவுனியா | வவுனியா வடக்கு | 174 | 8,700,000.00 | 43,500.00 | 87,000.00 | 8,830,500.00 |
| 22 | மன்னார் | மன்னார் நகரம் | 423 | 21,150,000.00 | 105,750.00 | 211,500.00 | 21,467,250.00 |
| 23 | கிளிநொச்சி | பச்சிளைப்பள்ளி | 157 | 7,850,000.00 | 39,250.00 | 78,500.00 | 7,967,750.00 |
| 24 | மட்டக்களப்பு | வவுனியா வடக்கு | 139 | 6,950,000.00 | 34,750.00 | 69,500.00 | 7,054,250.00 |
| 25 | திருகோணமலை | பதவி ஸ்ரீபுர | 87 | 4,350,000.00 | 21,750.00 | 43,500.00 | 4,415,250.00 |
| 26 | முல்லைத்தீவு | துணுக்காய் | 174 | 8,700,000.00 | 43,500.00 | 87,000.00 | 8,830,500.00 |
| | | | 8,920 | 446,000,000.00 | 2,230,000.00 | 4,460,000.00 | 452,690,000.00 |

இணைப்பு 05

சமூக வலுவூட்டல் வேலைத்திட்டம் 2025

அஸ்வெசும பயனாளிகளின் பொருட்டு வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்துதல்

பிரதேச செயலகப் பிரிவு:- கிராம உத்தியோகத்தர் :-

| இலக்கம் | பயனாளியின் பெயர் | முகவரி | அஸ்வெசும வீட்டிலக்கம் | சொந்தமான தொகுதி | | கருத்திட்டம் | கருத்திட்ட காரணம் | | கருத்திட்டத்தின் மொத்தக்கடன் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வறிய | மிக வறிய | | பயனாளிப் பங்களிப்பு | அரசாங்க பங்களிப்பு | |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |
| 5 | | | | | | | | | |
| 6 | | | | | | | | | |
| 7 | | | | | | | | | |
| 8 | | | | | | | | | |
| 9 | | | | | | | | | |
| 10 | | | | | | | | | |
| 11 | | | | | | | | | |
| 12 | | | | | | | | | |
| 13 | | | | | | | | | |

தயாரித்தவர் :- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பெயர்:-
கையொப்பம்:-
திகதி:-

பரீட்சித்தவர் - கருத்திட்ட முகாமையாளர்
பெயர்:-
கையொப்பம்:-
திகதி:-

அங்கீகரித்தவர் பிரதேச செயலாளர்
பெயர்:-
கையொப்பம்:-
திகதி:-

| அலுவலக பாவனைக்கு | |
|---|---|
| ஒப்பந்த பத்திரம் இலக்கம் | |

**சமூக வலுவூட்டல் வேலை திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் கருத்திட்ட பயனாளிக்கும் இடையே செய்து கொள்ளப்படுகின்ற ஒப்பந்தம்**.

இங்கு முதலாம் தரப்பினரென சொல்லப்படுகின்ற இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட 04 ஆவது மாடி செத்சிறிபாய,பத்தரமுல்லை என்ற இடத்தில் அமைந்துள்ள சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பொருட்டு.......................... மாவட்டத்தின்............................ பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் பிரதேச செயலாளர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்படுகின்ற சமுர்த்தி முகாமையாளர் ஒரு பிரிவினராகவும்,

இரண்டாம் தரப்பினரென கூறப்படுகின்ற அந்த அதிகார பிரதேசத்தில்................................(நிரந்தர முகவரி) வதியும்............................ என்ற தேசிய அடையாள அட்டையை தேசிய அடையாள அட்டை இலக்கத் திணைக்களம் கொண்ட திரு/திருமதி/செல்வி...........................................................(முழு பெயர்) என்பவரும் (இதனகத்து கருத்திட்டப் பயனாளி என அழைக்கப்படுகின்ற) இருதரப்பாக கட்டுப்பட்டு இணக்கப்பாட்டுடன்........... ஆண்டு........... மாதம்........ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமாகும்.

**மேற்சொன்ன ஒப்பந்தத்தின் நிபந்தனைகளாவன,**

1. மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வருமான மீட்டல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் பொருட்டு இனங்க காணப்பட்ட (கருத்திட்டத்தின் பெயர்).................................. பொருட்டு மேற்சொன்ன கருத்திட்டப் பயனாளி பொருத்தமானவர் என்பதனால் கீழே காட்டப்பட்டுள்ள கருத்திட்ட உள்ளீடுகளை கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக ஒப்படைப்பதற்கு இருதரப்பினரும் இறங்குகின்றனர்.

2. மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய சமுர்த்தி வேலைத் திட்டத்தின் கீழ் மேற்படி கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்காக கீழுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா.....................................................(ரூ............) பெறுமதியான கருத்திட்ட உள்ளீடுகள் இன்றைய தினம் கருத்திட்டப் பயனாளிக்கு ஒப்படைத்ததாக இருதரப்பினரும் இணங்குகின்றனர்.

3. மேலுள்ள ஒப்பந்தத்திற்கு அமைய வழங்கப்பட்ட பயிற்செய்கைக் கருத்திட்டம்/......................................... கருத்திட்டத்தினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதாக இரு தரப்பினரும் இணங்குகின்றனர்.

4. மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய பெற்றுக் கொண்ட மேற் சொன்ன உள்ளீடுகளை இக்கருத்திட்டத்தின் பொருட்டு மாத்திரம் பயன்படுத்திக் கொண்டு கருத்திட்டத்தினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு இரண்டாம் தரப்பினர் கட்டுப்பட்டுள்ளார்.

5. மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய கருத்திட்டத்தினை செயற்படுத்தும் போது இயற்கை அனர்த்தம் ஒன்று தவிர்ந்த கவனயீனம் காரணமாக கருத்திட்டத்திற்கு பாதிப்பு ஒன்று ஏற்படுவதன் மூலம் கருத்திட்டம் வெற்றிகரமாகாவிட்டால் அரசாங்கத்தினால் செலவிட்ட மொத்த தொகையினையும் இரண்டாம் தரப்பினர் முதலாம் தரப்பினருக்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.

6. மேற்படி ஒப்பந்தத்திற்கு அமைய ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டமானது ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் சேதமடைந்தால் உடனடியாக அந்த விடயம் பற்றி பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது (கருத்திட்ட/தலைமைப் பீட) முகாமையாளருக்கு சம்பவம் நடைபெற்று 24 மணித்தியாலத்திற்குள் அறிவிப்பதாக இரண்டாம் தரப்பினர் இணங்குகின்றனர்.

7. மேற்படி ஒப்பந்தத்திற்கமைய கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் பின் பணி ஆய்வுகளை மேற்கொள்வது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு/கருத்திட்ட முகாமையாளருக்கு மற்றும் குறித்த ஏனைய உதவிச் சேவைகளை வழங்கும் உத்தியோகத்தர்களுக்கும் உள்ளது என்பதனை இருதரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

8. இந்த ஒப்பந்தத்திற்கு அமைய கருத்திட்டம் தொடர்பில் மேற்படி நிபந்தனைகள் மீறப்படுதல் அல்லது தவறும் பட்சத்தினால் இந்த இரு தரப்பினருக்கும் இடையே ஏற்படுகின்ற பிரச்சனைகள் அல்லது சிக்கலான நிலைகளின் போது பணிப்பாளர் தலைமை அதிபதியின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

இதற்கு சாட்சியாக முதலாம் தரப்பினரின் பொருட்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்காக...................................................... பிரதேச செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்படுகின்ற சமுர்த்தி முகாமையாளர் மற்றும் இரண்டாம் தரப்பினருக்காக கருத்திட்டப் பயனாளி..........ஆம் ஆண்டு......... மாதம்........ஆம் திகதி..........................................இல் கையொப்பமிட்டனர்

| | |
|---|---|
| முதலாம் தரப்பினர் | இரண்டாம் தரப்பினர் |
| கையொப்பம் ......................... | கையொப்பம் ......................... |
| தலைமைப்பீட / கருத்திட்ட முகாமையாளர் | கருத்திட்டப் பயனாளி |
| பதவி இலச்சினை | தே.ஆ.அ. இலக்கம் .................................. |
| திகதி : | திகதி : |

| | |
|---|---|
| முதலாம் தரப்பினருக்கான கையொப்பத்திற்கான | முதலாம் தரப்பினரின் கையொப்பத்திற்கான சாட்சி |
| 1. கையொப்பம் : | 2. கையொப்பம் : |
| பெயர் : | பெயர் : |
| தே.ஆ.அ. இலக்கம் : | தே.ஆ.அ. இலக்கம் : |